# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : சதம் 75

## 1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[1987 ஆம் ஆண்டு ஏப்பிறல் 16 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 14/86 (vii)

**1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1987 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைகள் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டமென எடுத்துக் காட்டப்படலாமென்பதுடன், கசற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று, அது நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1985 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைகள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, "பட்டின சபைகள் கட்டளைச்சட்டம், கிராமச்சபைகள் கட்டளைச்சட்டம் அத்துடன் 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச்சபைகள் சட்டம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச்சபைகள் சட்டம் அத்துடன் பிரதேச சபைச் சட்டம்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. 1979ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, "உள்ளூரதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்தில், "நகரசபை அல்லது அபிவிருத்திச்சபை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நகரசபை, அபிவிருத்திச்சபை அல்லது பிரதேச சபை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.

✱ 094622—2,900 (86/12)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.